**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.221/2023 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அமுதா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. செல்வகுமார் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.04.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர் எனது மாமியார். 2011ம் வருடம் எனக்கு திருமணம் நடந்தது. நானும் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் தற்போது சமாதானமாகிவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்பவம் பற்றி வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

1. நானும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரும் சமாதானமாகிவிட்டோம் என்றால் சரிதான். சமாதான மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். **மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

2. கடந்த 2011ம் வருடம் எனக்கும் செல்வகுமார் என்பவருக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின் போது நகை மற்றும் சீர்வரிசைப்பொருட்கள் கொடுத்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றும் அதன் பிறகு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் என்னிடம் பணம் கேட்டு என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்றும்

கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறிவிட்டு தற்சமயம் நான் சமாதானமாகிவிட்டதால் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.221/2023 P.W. 2 Additional Witnesses**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. லதா (சிறப்பு உதவி ஆய்வாளர்) | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 01.04.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. நான் தற்பொழுது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். மேற்படி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பிரேமலதா மற்றும் ஆய்வாளர்கள் வின்செட் அன்பரசி, ரெஷிதா மற்றும் ஜாணகி ஆகியோர்களை நன்கு தெரியும். அவர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்தை நன்கு அறிவேன். வழக்கின் தன்மை கருதி வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 01.07.2020 ம் தேதி 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் நிலையப்பொறுப்பில் இருந்த போது நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற D.No. 1685/2020, dated 27.09.2019, Crl.M.P. 5851/2019, dated 29.08.2019ன் படி அமுதா என்பவர் கொடுத்திருந்த புகார் மனுவினைப் பார்வையிட்டு புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 22/2020 சட்டப்பிரிவுகள் 498A, 406, 420, 506 (ii) இ.த.ச 1860 and 3, 4 D.P. Act ன் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்துள்ளார்.

3. மேற்படி வழக்கு கோப்பை ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகளை விசாரணைச் செய்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கைப்பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஹேமலதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்துள்ளார். பின்பு இவ்வழககினை ஆய்வாளர்கள் ரெஷிதா, ஜாணகி ஆகியோர்கள் மேற்கொண்டு சாட்சிகளை விசாரணைச் செய்துள்ளார்கள். அவரது விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால்

வழக்கின் சட்டப்பிரிவினை 498A, 406, 506(ii) IPC 1860 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

சம்பவயிடம் செல்லாமலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும் புகார் மனுவினை முறைப்படி விசாரணை செய்யாமலும் நடக்காத சம்பவத்தை நடந்ததாக சித்தரித்து இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்ப்பும் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.